சென்னை-600 025
27 ... 2007
பாலிடெக்னிக் ...
-5 NOV 2007
மதுரை-625 011

<u>சுருக்கம்</u>

உயர்கல்வி – தொழில் நுட்பக் கல்வி – 2007–08 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான அறிவிப்பு –அரசு பொறியியற் கல்லூரிகள் / பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர அக்கல்லூரிகளில் "பணியமர்த்தல் மையம்" அமைத்தல் – ஆணை வழங்கப்படுகிறது.

---

உயர்கல்வித் (சி2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.324 — நாள்: 21.9.2007

39587 16858

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (டி) எண்.26, உயர் கல்வி, நாள் 28.6.1997.
2. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண். 16858/எச்3/2007, நாள் 24.5.2007 மற்றும் 1.6.2007

******

<u>ஆணை</u>

சட்டமன்றப் பேரவையில், 2007–2008 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கையில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பிற அறிவிப்புகளுக்கிடையே கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

"உயர்கல்வியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவது. அரசு கல்லூரிகள் அல்லாத பிற கல்லூரிகளில் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்கு பணியமர்த்தல் மையம் (Placement Centre) ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாக பல்வேறு தொழில் நிறுவனங்களை அணுகி மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுத் தருகிறார்கள். ஆனால், அரசு கல்லூரிகளில் அதேபோன்ற பணியமர்த்தல் மையம் இல்லாத நிலைமையுள்ளது. அதனை கருத்தில் கொண்டு பணியமர்த்தல் மையம், அனைத்து பொறியியல், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தொழில் நிறுவனங்களை அணுகி மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்."

2. மேற்காண் அறிவிப்பிற்கிணங்க தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், அரசு பொறியியற் கல்லூரிகள் / பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர அக்கல்லூரிகளில் "பணியமர்த்தல் மையம்" (Placement Cell) அமைப்பது தொடர்பாக பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அவரது கடிதத்தில் கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனத்துடன் பரிசீலித்தது. அரசு பொறியியற் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஏற்கனவே போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இருக்கும் நிலையில் கூடுதலாக உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படாது என்றும், ஆயினும் நிதி தேவைபடும் பட்சத்தில் கல்லூரிகளில் உள்ள பல்வேறு கணக்குத் தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து அவற்றின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் இதற்கென தனி நிதி ஒதுக்கீடு அல்லது ஒப்பளிப்பு தேவையில்லை என்றும் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் 22 அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு தொலைபேசி மற்றும் இணையதளத்துடன் கூடிய நிகரி போன்ற வசதிகள் மேற்கொள்ள தலா ரூ.15,000/–வீதம் (22x15,000= 3,30,000/–) ரூ.3,30,000/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) வழங்க ஒப்புதலளித்து ஆணையிடுகிறது.

4. அரசினர் பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணியமர்த்தல் அலுவலர்களுக்கு (Placement Officers) மாதம் ரூ.500/– வீதம் மதிப்பூதியம் வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது;

5. மேற்காண் செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>அரசினர் பொறியியற் கல்லூரிகளை பொறுத்தமட்டில்</u>

"2203 00 தொழில் நுட்பக் கல்வி 112. பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் I. திட்டத்தில் சேராதது–AA. பொறியியல் கல்லூரிகள் 33. தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 02. ஊதியம் (து.தொ.கு. 2203 00 112 AA 3323) "

<u>அரசினர் பல்தொழில் பயிற்சிப் பயிலகக் கல்லூரிகளை பொறுத்தமட்டில்</u>

"2203 00 தொழில் நுட்பக் கல்வி 105. பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள் I. திட்டத்தில் சேராதது–AA. அரசு பல்தொழில் பயிற்சிப் பயிலகக் கல்லூரிகள் (ஆடவர்) 05. அலுவலகச் செலவுகள் 01. தொலைபேசிக் கட்டணங்கள்.
(து.தொ.கு. 2203 00 105 AA 0518) " – ரூ.1,95,000/–

2203–00–105–AA-33. தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 02. ஊதியம் (து.தொ.கு. 2203 00 105 AA 3328) "

"2203 00 தொழில் நுட்பக் கல்வி 105. பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள் I. திட்டத்தில் சேராதது–AB. அரசு பல்தொழில் பயிற்சிப் பயிலகக் கல்லூரிகள் (மகளிர்) 05. அலுவலகச் செலவுகள் 01. தொலைபேசிக் கட்டணங்கள்
(து.தொ.கு. 2203 00 105 AB 0516) " – ரூ. 60,000/–

2203–00–105–AB-33. தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 02. ஊதியம் (து.தொ.கு. 2203 00 105 AB 3326)

..3..

2203 00 தொழில் நுட்பக் கல்வி 105. பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள் I. திட்டத்தில் சேராதது–AC. சிறப்பு பட்டயக் கல்வி நிறுவனங்கள் 05. அலுவலகச் செலவுகள் 01. தொலைபேசிக் கட்டணங்கள்

(த.தொ.கு. 2203 00 105 AC 0514) – (ரூ. 75,000/–

2203–00–105–AC–33. தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 02. ஊதியம் (த.தொ.கு. 2203 00 105 AC 3324) "

6. தேவையான நிதி 2007–2008ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வரையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை 2007–2008ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில்/இறுதித் திருத்த தொகையொதுக்கத்தில் சேர்க்கும் பொருட்டு தக்க கருத்துருவினை உரிய நேரத்தில் அரசின் நிதித்துறைக்கு தவறாமல் அனுப்பி வைக்கும்படி தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.60718/கல்வி–1/2007, நாள் 19.9.2007–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.957 (தொள்ளாயிரத்து ஐம்பத்து ஏழு).

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18/35.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–15 / கோயமுத்தூர்.
நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி–1) (பிஜி.2) துறை, சென்னை–9.
உயர்கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இகோ / உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21.9.07

பிரிவு அலுவலர்.